(இ) தொழில் முனைவோர்களைத் தமிழ்நாட்டின் பக்கம் ஈர்க்கும் வகையில் தொழில் கொள்கைகளை வகுத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரும்பும் வியர்வை உதிர்த்துப் புவிமேல் ஆயிரம் தொழில் செய்திடுவீரே" என்ற மகாகவி பாரதியின் வரிகளுக்கிணங்க, நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாததாக விளங்கும் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், சாதகமான தொழில் கொள்கைகளை வகுத்து, தொழில் முனைவோர்களை தமிழ்நாட்டின் பக்கம் ஈர்க்கும் நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்துவருகிறது.

முற்பகல் 10-20

புதிய முதலீடுகளை ஈர்த்து, புதிய தொழிற்சாலைகளைத் தோற்றுவித்து, வேலைவாய்ப்புகளை உருவாக்கி, அதன்மூலம் தமிழக மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திட வேண்டும் என்பதே எனது அரசின் இலக்காகும். இந்த இலக்கை அடைய வேண்டுமெனில் எரிசக்தியில் தன்னிறைவு அடையப்பட வேண்டும். பிற மாநிலங்களில் எரிசக்தித் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் இயற்கை எரிவாயுவின் பங்களிப்பு இருந்தாலும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், எரிசக்தித் தேவைகள் நிலக்கரி மற்றும் பெட்ரோலியப் பொருட்களையே சார்ந்துள்ளன.

கிருஷ்ணா, கோதாவரி படுகையிலிருந்து கிடைக்கப் பெறும் எரிவாயு, குழாய் கட்டமைப்பு உள்ள மாநிலங்களுக்கு மட்டும் மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தென் மாநிலங்களைப் பொறுத்தவரை, ஆந்திர மாநிலத்திற்கு மட்டும்தான் எரிவாயு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டின் எரிசக்தித் தேவையைப் பூர்த்தி செய்ய எரிவாயுவின் பங்களிப்பு அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, அதன் அடிப்படையில், எனது அரசால் வெளியிடப்பட்ட "தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம், 2023"-ல் திரவ நிலை எரிவாயு முனையங்கள் அமைப்பது மற்றும் எரிவாயு விநியோகக் குழாய் இணைத் தொகுதிகள் அமைப்பது ஆகியவை எடுத்துச் சொல்லப்பட்டுள்ளன.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2012 மே 11

தமிழ்நாட்டின் எரிசக்தித் தேவையைப் பூர்த்தி செய்ய வருடத்திற்கு 5 மில்லியன் டன் கையாளும் திறன் கொண்ட இரண்டு திரவ நிலை எரிவாயு இறக்குமதி முனையங்கள் தேவை எனக் கண்டறியப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டம், காட்டுப்பள்ளி கிராமத்தில், எண்ணூர் துறைமுகத்தின் அருகில் திரவ நிலை எரிவாயு இறக்குமதி முனையம் ஒன்றினை அமைக்கும் வகையில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும், அதாவது டிட்கோ நிறுவனமும், மத்திய அரசு நிறுவனமான இந்தியன் ஆயில் நிறுவனமும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை 22-3-2012 அன்று எனது முன்னிலையில் செய்துகொண்டன.

2016 ஆம் ஆண்டில் இம்முனையம் செயல்படும்போது ஆண்டொன்றுக்கு 5 மில்லியன் டன் திரவ நிலை எரிவாயுவை இறக்குமதி செய்து அதன்மூலம் நாளொன்றுக்கு சுமார் 18 மில்லியன் கன மீட்டர் எரிவாயுவை தமிழ்நாட்டின் மின் உற்பத்திக்கும், தொழிற்சாலைகளுக்கும், வாகனங்களுக்கும், வீட்டு உபயோகத்திற்கும் விநியோகம் செய்ய இயலும். (மேசையைத் தட்டும் ஒலி)

இதனை விநியோகிக்கத் தேவையான குழாய் தொடரமைப்புத் திட்டங்கள் அவசியம் என்பதன் அடிப்படையில், கெயில் நிறுவனமும், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும், அதாவது டிட்கோ நிறுவனமும் எரிவாயு ஒத்துழைப்பு செயல் திட்ட ஒப்பந்தம் ஒன்றில் 10-5-2012 அன்று எனது முன்னிலையில் கையெழுத்திட்டன.

1. கெயில் நிறுவனம், கொச்சியில் நிறுவப்பட்டுவரும் திரவ எரிவாயு முனையத்திலிருந்து எரிவாயுவைக் கொண்டு செல்லும் கொச்சி-பெங்களூரு குழாய் தொடரமைப்புத் திட்டத்தின் கட்டுமானப் பணிகளைத் தொடங்கியுள்ளது. இக்குழாய் தொடரமைப்பில், 310 கிலோ மீட்டர் நீளமுள்ள பகுதி தமிழ்நாட்டின் கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர், நாமக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் வழியாகச் செல்லும். கெயில் நிறுவனம், தமிழ்நாடு வழியே செல்லும் இக்குழாய்